★ விலை ரூபா 1·00

# ஈழநாடு

THE EELANADU

(1958 வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆவணி 11 ஜுலகஃ 17 இதழ் 195

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 27-8-83

## பார்த்தசாரதி அழைப்பு மீது 'அமிர்' நாடு திரும்பினர்

((கொழும்பு)

திரு, ஜி, பார்த்தசாரதியின் தொலைபேசி அழைப்பின்மீது திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுக் காலை 9 மணியளவில் கொழும்பு திரும்பினர்.

இலங்கை ஜனதிபதியுடன் திரு. ஜி. பார்த்தசாரதி நடத்தும் பேச்சுவார்த்தையின் போது தாமும் கொழும்பில் இருக்கவேண்டுமென்பதற்காகவே திரு. அமிர்தலிங்கம் உடன் நாடு திரும்பியதாக இலங்கை வானெலி நேற்று அறிவித்தது.

திரு. அமிர்தலிங்கம் முன்னர் தமது இலங்கை வருகையை பாதுகாப்பு காரணங்களுக்காக இராமேஸ்வரத்திலிருந்து கப்பல் மூலமாக யாழ்ப்பாணம் வர எண்ணியிருந்தார்.

பின்னர் திரு. பார்த்தசாரதியுடன் தொடர்பு கொண்டு பேசிய பின்னர் தமது பயணத்தை மாற்றிக் கொண்டு, கொழும்பு புறப்பட்டுள்ளதாகவும் இலங்கை வானெலி தெரிவித்தது.

இலங்கை அதிபர் திரு.ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் பேச்சுநடத்துவதற்காக கொழும்பு செல்லும் பிரதமரின் விசேட தூதுவர் திரு.ஜி. பார்த்தசாரதி, தனது பேச்சுவார்த்தைகளுக்கு வசதியாக தொலைபேசியில் தொடர்பு கொள்ளும்வகையில் திரு. அமிர்தலிங்கத்தை சென்னையிலேயே இருக்குமாறு முன்னர் கோரிக்கை விடுத்திருந்தார்.

திரு. பார்த்தசாரதி கொழும்பு செல்லும் வழியில் சென்னைவந்திருந்தபோது திரு. அமிர்தலிங்கத்தைசந்தித்தார்.

கொழும்பு சென்றுள்ள இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் விசேட தூதுவர் திரு.ஜி. பார்த்தசாரதியை இரண்டாவது தடவையாக

(4-ம் பக்கம் பார்க்க)

# ஜனதிபதி பார்த்தசாரதி முதற்கட்டப் பேச்சு

# ஒன்றரை மணிநேரம் நடந்தது!

## விபரங்கள் வெளியிடப்படவில்லை

(கொழும்பு)

ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் விசேட தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதி நேற்றுக்காலை சுமார் ஒன்றரை மணிநேரம் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினர். இப்பேச்சுவார்த்தை பற்றிய விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

நேற்று முன்தினம் இலங்கை வந்து சேர்ந்த திரு. பார்த்தசாரதி நேற்றுக் காலை 10 மணியளவில் ஜனதிபதி மாளிகையில் ஜனதிபதியை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினர். இப்பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெறும் என்று தெரிகிறது.

## கூட்டணி எம். பி.க்கள் 'அமிரை'ச் சந்திப்பர்

(கொழும்பு)

சென்னையிலிருந்து நேற்றுக் காலைவிமான மூலம் கொழும்பு வந்து சேர்ந்த எதிர்க் கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் கொழும்பில் தங்கியுள்ளார். பாரதத்திலிருந்து திரும்பி

(4-ம் பக்கம் பார்க்க)

## பார்த்தசாரதி இராமேஸ்வரம் மீனவரையும் சந்தித்தார்

சென்னை, ஆக.26

இலங்கை செல்லும் வழியில் சென்னையில் தங்கிநின்ற இந்தியப்பிரதமரின் விசேட பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதி ராமேஸ்வரம் மீனவர் சங்கத்தவர்கள் சிலரையும் சந்தித்தார்.

ராமேஸ்வரத்தில் மீன்பிடித் தொழில் புரியும் மீனவர்கள் இலங்கை கடல் பிராந்தியத்துக்கருகில் தாம் துன்புறுத்தப்படுவதாகக்கூறி கடந்த சில தினங்களாக ஆர்ப்பாட்டம் நடத்திவந்தனர். நேற்று முன்தினம் இவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்த சுமார் 12 மீனவ சங்கங்கள் தமிழக முதலமைச்சர் திரு.எம். ஜி.ராமச்சந்திரனைச் சந்தித்து தமது பிரச்னைகளைத் தெரிவித்தன.

இச்சந்திப்பை யடுத்தே அவர்கள் இலங்கை செல்லவிருந்த விசேட பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதியிடமும் தமது பிரச்னைகளைத் தெரிவித்

(4-ம் பக்கம் பார்க்க)

## "பிரச்னைகளைத் தீர்க்க தமிழ், சிங்களத் தலைவர்கள் உண்மையான விருப்பத்துடன் பொதுமுயற்சியில் இறங்கவேண்டும்!"

### இந்தியப் பிரதிநிதி ஜி. பார்த்தசாரதி

(கொழும்பு)

''இலங்கையில் தமிழ், சிங்கள மக்களிடையேயுள்ள பிரச்னையைத் தீர்க்க இந்த இரு சமூகத்தவரதும் தலைவர்கள் உண்மையான விருப்பத்துடன் பொதுமுயற்சியில் இறங்கவேண்டும்'' என்று இந்தியப் பிரதமமந்திரியின்விசேட பிரதிநிதியாக இலங்கை வந்துள்ள திரு. கோபாலசுவாமி பார்த்தசாரதி இலங்கைப்பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

திரு. ஜி.. பார்த்தசாரதி வியாழக்கிழமை பிற்பகல் இலங்கை வந்து சேர்ந்தார். ஜனதிபதி ஜெயவர்த்தனவின் காரியதரிசி திரு. ட்பிள்யு. எச். பி.மெனிக்திவெல இந்தியஉயர் ஸ்தானிகர் திரு. சத்வால், சென்னையிலுள்ள இலங்கை உதவி உயர் ஸ்தானிகர் திரு. பேர்னுட்திலகரத்ன ஆகியோர் உட்பட இந்திய, இலங்கை வெளிநாட்டமைச்சுக்களின் உயரதிகாரிகள் விமான நிலையத்தில் இவரைவரவேற்றனர்.

திரு. ஜி. பார்த்தசாரதி தொடர்ந்து கூறியதாவது; ''இலங்கையில் இன அடிப்படையில் வன்முறைகள் தோன்றுவதை நிறுத்துவதே தற்போது உடனடியாக எடுக்க வேண்டிய முதல் நடவடிக்கையாகும்.

சிறுபான்மை, பெரும்பான்மை சமூகத்தவரிடையே உள்ள பிரச்னைகளை இந்த இரு சமூகத்தவரதும் தலைவர்கள் உண்மையான விருப்பத்துடன் பொதுமுயற்சிமூலமாக தீர்த்து வைக்க முயலவேண்டும்.

எனது பணி மிகவும் சிரமமானதாகும். ஜனதிபதி ஜயவர்த்தனவுடன் நான் பேசவிருக்கும் விடயங்கள் மிகவும் நுணுக்கமானவை. ஆகையினால் மிகவும் நிதானத்துடன் ஒவ்வொரு அம்சங்களையும் ஆராயவேண்டியுள்ளது.

## அவசரகாலச் சட்டநீடிப்புப் பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேறியது!

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தினை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை பாராளுமன்றத்தில் நேற்று முன்தினமிரவு 140 வாக்குகளுடன் ஏகமனதாக நிறைவேறியது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிஉறுப்பினர்களும் அவசரகாலச் சட்ட அமுலாக்கத்தை ஆதரித்து வாக்களித்தனர்.

பிரதான எதிர்க்கட்சியினரான தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் எவரும் நேற்று பாராளுமன்றத்துக்கு வரவில்லை. மகரகம, கலவான தொகுதிகளின் உறுப்பினர்கள் வாக்கெடுப்பின் போது சபையில் இருக்கவில்லை.

### பிரதமர் பேச்சு

பிரதம மந்திரி திரு ஆர். பிரேமதாசா அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை சபையில் சமர்ப்பித்து உரையாற்றுகையில் கூறியதாவது: ''நாட்டில் நற்பிரஜைகளாக வாழ விரும்பும் சகலருக்கும் தகுந்த பாதுகாப்பு வழங்கப்படும். அண்மையில் நாட்டில் ஏற்பட்டது இனக்கலவரமல்ல. அரசின் பொருளாதார, அபிவிருத்தி வேலைத் திட்டங்களைக் கண்டு பொருமை கொண்டே விஷமச் சக்திகள் அரசைக் கவிழ்க்க மேற்கொண்ட கலகமே அக்கலவரங்களாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அவசரகாலச் சட்டம்

(4-ம் பக்கம் பார்க்க)

## இரு பஸ் தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

அளவெட்டியிலும், இணுவிலிலும் இரு பஸ்களுக்கு நேற்று முன்தினம் தீவைக்கப்பட்டதால் அவை முற்றாக எரிந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இருபஸ்கள் சேதமாக்கப்பட்டன.

அரசுக்கு சொந்தமான இரு ஜீப் வண்டிகள் சேதமடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஜீப்வண்டிகள் களவாடப்பட்ட மறுதினம் ஒட்டுசுட்டானில் கண்டுபிடிக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

## கனடா செல்லவிருந்த 24 பேர் கைது!

(கொழும்பு)

போலிப் பாஸ்போட்டுடன் கனடாவுக்குச் செல்லவிருந்த 24 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட இவர்கள் பயங்கரவாத சம்பவங்களுடன் தொடர்பு இல்லாதவர்கள் என்றும் கடவுச்சீட்டில் போலியான விபரங்கள் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் தகுதிவாய்ந்த அதிகாரி தெரிவித்தார். (கு)

## விற்பனைக்கு

### தென்னந்தோட்டம்

1. பளை சந்திக்குச் சிறிது தூரத்திலுள்ள பதினெரு ஏக்கர் கொண்ட தென்னந்தோட்டம்.

### தோட்டக்காணி

2. பளை புகையிரத நிலையத்துக்குச் சிறிது தூரத்திலுள்ள இரு பிரதான வீதிகளின் மத்தியில் தற்போது தோட்டம் செய்யப்படும் வளமான மண்கொண்ட 46 1/4 பரப்புக்கொண்ட தோட்டக்காணி.

தொடர்பு:

திருமதி வ. கமலாநந்தன்

713, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 22391.

(8365)

## செய்தித் தணிக்கை

கடந்த மாதம் 20-ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லூரில் புதியவீடு, மின்சார, தண்ணீர் வசதி (மோட்டர்) யுடன் விற்பனைக்கு உண்டு. வர்த்தகர்களுக்கு நல்லதோர் இடம். தொடர்புகளுக்கு எம். பி. பரமேஷ், இல. 55 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் 8377

முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பு சைவப் பாடசாலைக்கு அருகில் சிறிய வீட்டுடன் 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு மேற்குறித்த விலாசத்தில் நேரில் 31-08-83 பிற்பகல் 2 மணிக்கு மேல் அல்லது 14/1 அன்னசத்திர ஒழுங்கை, கந்தர் மடம், யாழ்ப்பாணம் — கயிலாயநாதன். 8381

பாவித்த நல்ல நிலையில் உள்ள நடுத்தர, புதிய தமிழ் ஹிந்தி, ஆங்கில பக்தி பாடல் இசைத்தட்டுக்கள் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு;- J. Simon, 38, செம்மணி வீதி நல்லூர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு நேரில் வரவும். 8371

சிறந்த நிலையிலுள்ள 9 ஸ்ரீ தொடர்பிலக்க மொறிஸ் ஒக்ஸ்போட் கார் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு:- 7, நிக்கலஸ் லேன், கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குளி 8327

நல்ல அயலுக்குள் வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. வாங்கவிரும்புவோர் தொடர்பு கொள்ளவும். மனேஜர் எரிபொருள் நிலையம், மருதனுமடம். 8353

யாழ்ப்பாணம் நல்லூர் செம்மணிவீதி 98ம் (38) இலக்கத்தில் கல்விக்கந்தோருக்கு முன்பாக வீடுகட்டுவதற்கு 3பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு மேற்கண்டவிலாசத்திற்கு நேரில் வரவும். (8370)

எலெக்றிக்கல் சாமான்கள், டைப்ரைட்டர், வீட்டுச் சாமான்கள் உடன் விற்பனைக்கு உண்டு. 30, சுவாட்ஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி. (ஆசீர்வாதம் பிரஸ்சுக்கு முன் ஒழுங்கை) 8367

யாழ். மாநகர எல்லைக்குள் பள்ளிக்கூடங்கள் மத்தியில் வீடு கட்டுவதற்கு திறமான காணித்துண்டுகளும், வீடுகளும் விற்பனைக்கு அல்லது வாடகைக்குண்டு. 78, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 8368

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆனந்தன் வடலி வீதியில் உள்ள 1 லாச்சம் 7½ குளிவளவு, 1200 சதுர அடி வீடு, நல்ல தண்ணீர் கிணறு, மின்சாரம் ஆகிய வசதிகளுடன் (ரூபா200000/-) லட்சத்துக்கு மேல் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 2, சென்பற்றிக் றோட், றெக்கிளமேசன், யாழ்ப்பாணம். 8366

உடுவில், கிழக்கு கல்லூரி ஒழுங்கையில் ''ஆர்க்''கிக்கு எதிராக உள்ள வீடு விற்பனைக்குள்ளது. 122, ராசாவின் தோட்டம் வீதி, நல்லூர். தொலைபேசி: 23362 (8364)

## சேவை

பனம் விதைக்குப் பந்து. விளையாட்டுக்கழகங்கள் 1000 பனம் விதைகளை அனுப்பி ஒரு பெரிய பந்தைப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். 8361

## FOR SALE

HIFI 2 in 1, Records (English) LP and EP, Disco unit and lights, Dinner set, Washing Machine, T. V., Toaster, and manymore things, car for sale. Audi 80 LS, 11 Sri 4078 U. K. used, Leaving the country. 22, Somasundaram Avenue, Chundikuli. 8337

## வகுப்புகள்

கொழும்பில் இயங்கிய நாட்டிய 'கலாமந்திர்' அதன் மாணவிகளின் வசதி கருதி தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் வகுப்புகளை நடாத்தவுள்ளது. அதன் மாணவிகள் தொடர்பு கொள்ளவும். செல்வி வாசுகி சண்முகம் பிள்ளை, 719/1, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொலைபேசி; 23737. (8375)

Scientific Cutting, கேக் ஐசிங், Hair Style ஆகியவற்றிற்கு செப்டம்பர் 1ந் திகதி புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. சேரவிரும்புவோர் 30ந் திகதி செவ்வாய்க்கிழமை (9—3) மணிக்கிடையில் தொடர்பு கொள்ளவும். The LadiesAcademy, இல:27, 3வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (சாமி அன் கொம்பனி அருகாமையில் உள்ள ஒழுங்கை முடிவில் உள்ளது). 8302

## அறிவித்தல்

கொழும்பின் பிரபல A/L பௌதிக ஆசிரியர் V. Sundaramoorthy B.Sc. Eng. தனது வகுப்புகளை யாழ்ப்பாணத்தில் நடத்த இருப்பதால் அவரது மாணவர்களும் மற்றவர்களும் உடன்எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

521/11, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (8372)

# I C M A Section A
## November 83

மேற்படி பரீட்சைக்கான வகுப்புக்கள்

**பருத்தித்துறையிலும் தெல்லிப்பழையிலும்**

**1-9-83 இலிருந்து ஆரம்பமாகின்றன**

விபரங்கட்கும், பதிவுசெய்தலுக்கும்

Temple Tree
கந்தர் உடையார்ஒழுங்கை,
புலோலி மேற்கு
பருத்தித்துறை

சோதிவாசா,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை,
8373

# யாழ்ப்பாண அக்கடமி

**புதுதவணை**

**ஆரம்பம்: 29-8-83.**

1. க. பொ. த. உயர்தர ஆகஸ்ட் 84ம் ஆண்டு வகுப்புகள் மேற்கூறப்பட்ட திகதியில் ஆரம்பமாகும்.
2. ஆகஸ்ட் 83ம் ஆண்டு பரீட்சை தோற்றவிருக்கும் எமது மாணவர்களுக்குஇலவச கேள்வி-பதில் வகுப்புகள் நடத்தும் நோக்கம் இருப்பதனல் பங்குபெற விரும்புவோர் தவருது 29-8-83ம் திகதி சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.
3. இலங்கையின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து இப்போ யாழ்ப்பாணத்திலிருப்போரை மனதில் கொண்டு க. பொ. த. உயர்தர (விஞ்ஞான) ஆகஸ்ட் 1985ம் ஆண்டு பரீட்சைக்குரிய வகுப்புகளை புதிதாக ஆரம்பிக்க உத்தேசிக்கப்படுகின்றது. இதில் சேரவிரும்புவோர் அக்கடமிகாரியாலயத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்
தொலைபேசி எண்: 22617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
8329

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

# ஸ்தானிகரிடம் பிரஜாவுரிமை கோரினர்

(கொழும்பு)
இந்தியப் பிரஜாவுரிமை கோரி சுமார் இருநூறு இந்திய வம்சாவளி மக்கள் நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகரின் இல்லம் முன் கூடினர்.

இவர்கள் தாம் தாயகம் திரும்ப விரும்புவதாகவும் அதற்கான பிரஜாவுரிமையைப் பெற்றுத்தரும்படியும் கோரினர். இந்தியத் தூதுவர் திரு. சத்வால் இக்கூட்டத்தவரை அப்புறப்படுத்த பாதுகாப்புப்படையினரின் உதவியை நாடினர்.

பாதுகாப்புப்படையினர் இக்கூட்டத்தவரை அழைத்துச் சென்று அகதிகள் முகாம்களில் சேர்த்தனர். (கி)

## பதவி விலகல்

ஆழ்வாப்பிள்ளை மாணிக்கம் ஆகிய நான் ஐக்கியதேசியக் கட்சியின் உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொண்டுவிட்டேன் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

8378

## நினைவஞ்சலி



முத்துக்குமாரு

ஸ்ரீகுமாரன்

பிறப்பு: 29-7-46


இறப்பு, 25-7-83

அஞ்சலிதான் மிஞ்சியதோ ஐயாவே — ஆண்டவர் உம்மை
கெஞ்சியநாள் எத்தனையோ — எம்முயிரை
எஞ்சியநாள் எம்முடன் இருக்கவென
வாஞ்சையுடன் கேட்டோமே
வஞ்சகம் செய்துவிட்டாய் — வாய்விட்டு அழுவோமா
நெஞ்சம் பதறுதையோ
வெஞ்சிறையின் கொடுமை எண்ணி
கொஞ்சம் பொறுமையா நாமும் வருகின்றோம்.

**மனைவி, பிள்ளைகள், தாய், மாமி, சகோதரங்கள், மைத்துனர், மைத்துனிமார்கள்.**

உரும்பராய் கிழக்கு, உரும்பராய். (8383)

# உங்கள் பணத்திற்கு... 28% வட்டி...



சிறந்த பாதுகாப்பு வருமானம் உத்தரவாதம்

| காலம் | ரூபா 500/- — ரூபா 99,999/- | | ரூபா 100,000/- அதற்கு மேல் | |
|---|---|---|---|---|
| | மாதாந்தம் | கால முதிர்வு | மாதம் | கால முதிர்வு |
| 3 மாதம் | — | 16% | — | 17% |
| 6 மாதம் | — | 17% | — | 19% |
| 12 மாதம் | 19% | 22% | 20% | 23% |
| 18 மாதம் | 20% | 23% | 21% | 24% |
| 24 மாதம் | 21% | 25% | 22% | 26% |
| 30 மாதம் | 22% | 26% | 23% | 27% |
| 36 மாதம் | 23% | 27% | 24% | 28% |

# மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிதிநிறுவனம்

122. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 8267

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள் 27% வரையுண்டு

| | ரூ 500க்கு அதிகமான வைப்புக்கு | | 1,00,000 ரூபாவுக்கு அதிகமான தொகைக்கு கால முதிர்வின்போது |
|---|---|---|---|
| | மாதாந்தம் வட்டி | காலமுதிர்வு வட்டி | |
| 6 மாதம் | — | 18% | 21% |
| 12 மாதம் | 21% | 23% | 23% |
| 24 மாதம் | 23% | 25% | 27% |

சுருக்கமான தகவல்கள்

| நிதி அறிக்கை | 1977/78 ரூபாய் | 1978/79 ரூபாய் | 1979/80 ரூபாய் |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 4,030 | 250,000 | 250,000 |
| ஒதுக்கிய மூலதனம் | 143,588 | 246,615 | [illegible] |
| வைப்பு மூலதனம் | 3,579,820 | [illegible] | [illegible] |
| நிகரலாபம் (வரிகட்ட முன்) | [illegible] | [illegible] | [illegible] |
| நிகரலாபம் (வரிகட்டிய பின்) | 163,916 | 453,777 | [illegible] |
| பங்குலாபம் | — | 250,000 | 187,500 |

இயக்குனர்கள்
1. திரு. ஆர். மகாராஜா (நிர்வாக இயக்குனர்)
2. திரு. ஆர். இராஜமகேந்திரன (நிர்வாக இயக்குனர்)
3. திரு. வி. என் குமாரசாமி, F.C.A (Eng. & Wales), ATII (Eng.) M. Inst. A.M (Eng.), AMBIM (Eng.) F.C.A. (Cey.)
4. திரு. பி. [illegible] B. Sc. (Hons)
5. திரு. வி. சண்முகம் LLB (Lond) Hons A I B (Lond) சட்டத்தரணி
6. திரு. டி. ஜே. குணவர்த்தன B.Sc., A.C.A A.C.M.A
7. திரு. டபிள்யு. [illegible] MBIM (Eng.)
8. திரு. [illegible]

வியாபார நோக்கங்கள்
★ முதலீட்டு வைப்பு
★ கைத்தொழிலாளர்களுக்கு இயந்திரங்கள், மூலப்பொருள் இறக்குமதிக்கு கடன்வசதி
★ காப்புறுதி முகவர்.

ஸ்தாபகம்: 29-09-1976.
[illegible]: [illegible], கொழும்பு 8
[illegible]: 84 [illegible] வீதி கொழும்பு

# இனக்கலவரத்தை அடக்க அந்நிய படைகள் அவசியமில்லை

## இந்திரா கூறியதாகத் தகவல்

புதுடில்லி, ஆக. 25 ''ஒரு நாட்டில் தோன்றும் இனக் கலவரங்களை அடக்க அந்நாட்டுக்கு வெளிநாட்டுப் படைகளின் சேவை அவசியமில்லை'' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்ததாகத் தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பழனியாண்டி தெரிவித்தார்.

இலங்கையில் அமைதியைப் பேண வெளிநாட்டுப் படைகளை அங்கு அனுப்பவேண்டும் என்று இந்தியாவின் சர்வகட்சிகள் இந்தியப் பிரதமரை விண்ணப்பமொன்றின் மூலம் கேட்டிருந்தன. அவ்விண்ணப்பத்தில் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் சார்பில் திரு. பழனியாண்டியும் கைச்சாத்திட்டிருந்தார்.

புதுடில்லியில் இந்த விண்ணப்பம் கையளிக்கப்பட்ட போது, பிரதமர் இந்திரா வெளிநாட்டுப் படைகளை இலங்கைக்கு அனுப்புவது அவசியமற்றது எனக் குறிப்பிட்டு அதற்கான காரணங்கள் சிலவற்றையும் தெரிவித்தார். இக் காரணங்களால் திருப்தியடைந்ததைத் தொடர்ந்தே சர்வகட்சி விண்ணப்பத்தில் தாம் இட்ட கைச்சாத்தை திரு. பழனியாண்டி வாபஸ் பெறுவதாக அறிவித்துள்ளார்.

திரு. பழனியாண்டி மேலும் தெரிவித்ததாவது:-

''சைப்பிரஸ் நாட்டில் அமைதி காக்க வெளிநாட்டுத் துருப்புகள் அனுப்பப்பட்டது குறிப்பிடத்தக்க பலனைத் தரவில்லை என்று திருமதி இந்திரா தெரிவித்தார். அத்துடன் சர்வதேச ரீதியில் ஒரு இனக்கலவரத்தை அடக்க சர்வதேசப்படைகள் அனுப்பப்படுவது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துமென்றும் அவர் கூறினர்'' என்றார். (கி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00
கமலஹாசன்-ஸ்ரீதேவி
**கல்யாண ராமன்**

**றீகல்** கடைசி வாரம்
10-30, 2-00, 4-30
**GIRL FROM INDIA**

**சாந்தி** யாழ். நகர்
காலை 10-30, 2-30
ஜெய்சங்கர்
**துணிவே துணை**
புதியபிரதி - கலர்

**லிடோ** (யாழ். நகர்)
10-30, 1-30, 3-30
Sean Connery 007
YOU LIVE ONLY TWICE
(Colour - Scope)

**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30, 2-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் **துணை**
(கலர்)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
காலை 10-30
பிரதாப்— சோபா
**மூடுபனி**

**மனோகரா**
(யாழ்நகர்)
தினசரி மு. ப. 10-30
பி. ப. 2-00
சிவாஜி — விஜயா
**விஸ்வரூபம்**
(கலர்)

**ராணி** (யாழ். நகர்)
10-30, 2-30
கமலஹாசன் - அம்பிகா
**சகலகலா வல்லவன்**

**ராஜா** (யாழ்நகர்)
10-30, 1-30
பாக்கியராஜ்—அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
**அந்த 7 நாட்கள்**
(கலர்)

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
**பாலும் பழமும்**
புதியபிரதி)
27-8-83 சனி முதல்
10-30, 2-30, 6-00

## அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983

## முக்கிய அறிவித்தல்

அண்மையில் ஏற்பட்ட கலவரங்களால் யாழ். மாவட்டம் வந்துள்ள அகதிகள் யாரேனும் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வரும் படிவங்களையோ அல்லது அகதிகள் புனர்வாழ்வு நிதியம் - 1983 மூலம் விநியோகிக்கப்பட்டு வரும் படிவங்களையோ இதுவரை நிரப்பிக் கொடுக்கப்படாமல் இருப்பின் தயவு செய்து இவ்விரண்டு படிவங்களையும் கீழ்காணும் காரியாலயங்களில் ஒன்றில் உடனடியாகப் பெற்று நிரப்பிக் கொடுக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

1. யாழ்ப்பாண வை. எம். சி. ஏ. காரியாலயம்
2. யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் காரியாலயம்.

இயக்குனர் சபை
வை. எம். சி. ஏ. கட்டிடம்
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

8379

## அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983

## முக்கிய அறிவித்தல்

### கலவரங்களில் இறந்த அல்லது காணமல் போனவர்களின் தகவல்

அண்மையில் ஏற்பட்ட கலவரங்களில் இறந்தவர்களினதும் அல்லது காணமல் போய் இற்றைவரைக்கும் கண்டுபிடிக்கப்படாதவர்களைப் பற்றிய தகவல்களும் அவசியம் தேவைப்படுகின்றது. தயவு செய்து கீழ் கண்ட விபரங்களை உடன் எமக்கு அறிவிக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

1. முழுப்பெயர்
2. விலாசம் (யாழ்ப்பாணத்தில்)
3. கலவரத்தின்போது இருந்த விலாசம்
4. ஆண்/பெண்
5. வயது
6. செய்த தொழில்
7. அத்தாட்சிகள் இருப்பின் விபரம்;

இயக்குனர் சபை,
வை. எம். சி. ஏ. கட்டிடம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(8380)

ஈச்சமோட்டை கலட்டிப்புலம்

## ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அனுவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம்

27-8-83 சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும்.

28-8-83 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிதொடக்கம் 7மணி 28 நிமிடத்தில் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபையினர்
(8388)

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



**பொன்னையா தயாபரன்**
(பிரதான நிர்மாணப் பொறியியலாளர்)

மலர்வு: 16-8-36 — உதிர்வு: 7-9-82

'தீபம் அணைந்ததோ! அணைந்ததே!' என்று நாமெல்லாம் ஓலமிட்டு ஒப்பாரி வைத்து இன்று ஓராண்டு ஆகிறது. ஐய, எம் நெஞ்சமெல்லாம் ஒளிபரப்பி நிற்கும் அணையாத தீபம் நீர். நீர் அமரத்துவம் அடைந்த திதி நாளாம் இன்று நாம் செலுத்தும் கண்ணீர் அஞ்சலியை ஏற்றுக்கொள்வீராக.

மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.
அராலி கிழக்கு, அராலி
(8385)

**யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி**
வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

**குறெஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.**

**05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.**

ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA) போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)
கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்
தற்பொழுது விசேட சேவையாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான விமானப் பிரயாண ஒழுங்கு யாவற்றுக்கும் உடன் விரையுங்கள்!

**CROSS TRAVEL SERVICES (PVT) LTD.**
Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair

Stage II Modern Market Ist Floor
BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

## மணிவாக்கு

மனிதன் தன் ஆற்றலை முழுமையாகப்பிரயோகிக்குமிடத்தில் கடவுள் இருக்கிறார்.

—பேர்ள்ஸ்பக்

# நமது நோக்கு

## பிலிப்பைன்ஸ் படுகொலை!

பிலிப்பைன்ஸ் நாட்டின் எதிர்க்கட்சித்தலைவர் கொலைசெய்யப்பட்ட விடயம் எவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்காமலிருந்திருக்காது.

திரு. பெனிங்ஞோ எஸ். அக்கியுனோ மூன்றுண்டுகள் தமக்குத்தாமே ''நாடு கடத்தலை'' ஏற்படுத்திக்கொண்டு அமெரிக்காவில் வாழ்ந்த பின்னர் அண்மையில் நாடுதிரும்பினார். அவர் கொலைசெய்யப்படக் கூடும் என்ற அச்சமிருந்ததால் நாடுதிரும்பவேண்டாம்என பிலிப்பைன்ஸ் அரசாங்கம் விடுத்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல் திரு. அக்கியுனோ தாயகம்திரும்பினார்.

ஆட்சியிலிருக்கும் திரு. பேர்டினன்ட் மார்க்கோஸுக்கு அரசியல் ரீதியில் நேர் எதிரியும் மக்கள் செல்வாக்கை அபரிமிதமாகப் பெற்றிருந்தவருமான இவர் விமான நிலையத்தில் வந்திறங்கிய சில நிமிடங்களுக்கெல்லாம் இனந்தெரியாத நபர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார். பலத்த பந்தோபஸ்து ஏற்படுத்தப்பட்டிருந்தது உண்மையாய் இருப்பின் கொலைஞன் ஒருவன் எவ்வாறு அந்த இடத்தில் ஆயுதத்துடன் நிற்க முடிந்தது என்பது மர்மம் நிறைந்த கேள்வியாகும். அது மாத்திரமல்ல, கொலையாளி உடனடியாகவே பாதுகாப்புப் படையினரால் சுட்டுத் தள்ளப்பட்டான்- அவன் உயிருடன் பிடிபட்டிருந்தால் ஒருவேளை கொலை காரணமும் அதைத்திட்டமிட்டவர்களின் விபரமும் தெரிறவந்திருக்கும். ராணுவத்தினரே இக்கொலையைச் செய்ததாகவும் சம்பவத்தைப் பார்த்தவர்கள் சிலர் கூறியிருக்கிறார்கள்.

திரு. அக்கியுனோவின் மரணச்சடங்குகளில் சுமார் 50 ஆயிரம் பேருக்கும் அதிகமானமக்கள் கலந்துகொண்டார்கள். என்பதிலிருந்தே அவருக்கு அந் நாட்டில் இருக்கும் செல்வாக்கு புலனுகும்.

மக்கள் ஆதரவு எவ்வளவு இருந்தபோதிலும் இவ்வாறுன அரசியல் படுகொலைகளைத்தவிர்க்க முடியாமல் போவது பல நாடுகளிலும் சர்வசாதாரணமாக இடம்பெற்றுவருகின்றன.

திரு. அக்கியுனோவின் மரணம்தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு அதிபர் மார்க்கோஸ் ஏற்பாடுசெய்திருப்பது உண்மைதான். ஆனுல் அரசாங்கம் மீதே சந்தேகம் எழுந்திருக்கும் வேளையில் அரசாங்கமே விசாரணையை நடத்துவதென்றால் அதன் முடிவு என்னவாய் இருக்கும் என்று சொல்லவேண்டாம்.

அதிகாரத்தில் இருப்பவர்கள் தமக்கு எதிர்ப்பு உருவாகாமல் இருக்க எதிரிகளையும் எதிர் சமூகங்களையும் அழித்தொழிப்பதைத் தடுக்க ஐ. நா. போன்ற உலக நிறுவனங்களால் கூட முடியாதிருக்கின்றது. ஏனென்றால் ஐ. நாவில் அங்கம்வகிக்கும் சகல நாடுகளிலுமே ஏதோ ஒருவகையில் இவ்வாறுன நிலைமை இருந்தேவருகின்றது.

ஒரு நாட்டில் அரசியல் படுகொலைகள், இனக்கொலைகள் நடைபெறுவதாகக் குற்றஞ் சாட்டப்படும் போது அதுபற்றி சர்வதேசமட்டத்தில்தலையிட்டுவிசாரிக்கவும், ஏற்றநடவடிக்கைகள்எடுக்கவும் ஐ. நா. வுக்கு அல்லது உலக நீதிமன்றத்துக்கு உரிமை வழங்கும் வகையில் ஐ. நா. வில் உறுப்புரிமை பெறுவதற்கான ஒரு அடிப்படை நிபந்தனை ஏற்படுத்தப்படுமானுல் ஒருவேளை ஓரளவுக்காகுதல் இந்த நிகழ்வுகளைக் கட்டுப்படுத்த முடியும். ஆனுல் அதை யாரால்செய்ய முடியும்?

## நல்லூரான்

(வெண்பா)

நல்லூரான் வீதி நடந்தார் வினைதீர்க்கும் !
சொல்லரிய காட்சிதரு சுந்தரவேல் - எல்லோர்க்கும்
நாளும் வழிகாட்டும்! நம்புங்கள் நல்லூரான்
தோளும் கடம்பும் துணை.

**வித்துவான் சி. ஆறுமுகம்**

### பார்த்தசாரதி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனர்.

திரு. எம். ஜி. ஆர், திரு. பார்த்தசாரதி ஆகியோர் அவர்களின் பிரச்னைகளை அறிந்த பின்னர் அவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களை கைவிடும்படி கோரினர். இக்கோரிக்கையையடுத்து ஆர்ப்பாட்டம் நடத்திய 12 மீனவ சங்கங்கள் தமது நடவடிக்கைகளைக் கைவிடுவதாக அறிவித்தன. (கி)

### பார்த்தசாரதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் சந்தித்த இலங்கை எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தனது பாதுகாப்புப் பற்றியும் பிரஸ்தாபித்தார்.

தான் நாடு திரும்பும்போது தனக்குப் பாதுகாப்பு வழங்குவதுபற்றிய அரசின் நிலையை அவர் மூலம் அறியவிரும்புவதாக திரு. பார்த்தசாரதியிடம் தெரிவித்த திரு. அமிர்தலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைபற்றியும் எடுத்துக் கூறியதாக அகில இந்திய வானொலி அறிவித்தது. (கு)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம்ஆண்டு ஆகஸ்ட்மாதம்27-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389—24126.

# யாழ்ப்பாணத்தில் நேற்றும் பஸ்சேவை நடக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த போயா தினத்தை தொடர்ந்து மூன்று தினங்களாக வர்த்தகநிலையங்கள், தனியார் கல்லூரிகள், தியேட்டர்கள் பூட்டப்பட்டிருந்தன. வடபிராந்திய போக்குவரத்து பஸ்சேவைகளும், தனியார் பஸ் சேவைகளும் நடைபெறவில்லை.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாண மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து, வியாழன், வெள்ளி இரு தினங்களும், வர்த்தகநிலையங்கள்பூட்டப்பட்டிருந்தன. பஸ்சேவைகள் நடைபெறவில்லை.

நேற்று முன்தினம் காலை 10மணிவரை, பஸ்சேவைகள் குறைந்தளவில் நடைபெற்றபோதும், பிரயாணிகள்காணப்படவில்லை. காலை பதினெரு மணிக்குப்பின்பஸ்சேவை நடைபெறவில்லை. நேற்று முழு நாளும் வ. பி. போ. சபை பஸ்சேவைகள் நடைபெறவில்லை. மினிபஸ்சேவை 11 மணிக்குப்பின் இருக்கவில்லை. யாழ். நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

யாழ். நகரில், தேநீர்க் கடைகள்கூட மூடப்பட்டிருந்தன. மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று சுவரொட்டிகளைப் பார்த்துக்கொண்டிருந்தனர். டாக்ஸி சேவைகளும் நடைபெறவில்லை.

வங்கிகள், காலையில் திறந்திருந்தபோதிலும், சில மணிநேரம் மட்டும்தான் அங்கு வேலைகள்நடைபெற்றன.நேற்றுமுன்தினம் வங்கிகள் ஒருமணித்தியால கடமை நேரத்துடன் மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# இன்றைய பலன்

ஆவணி 12ம் திகதி
சனிக்கிழமை
(27—8—83)

மேடம்: மேடைப்பேச்சாளர்கள் பெரும் புகழ் அடைவர் நாடகக் கலைஞர்கள் போற்றப் படுவார்கள் துள்ளிவரும் வெள்ளிப்பணம் தொடர்புகளைக் கொண்டுவரும் தள்ளி வைத்த மக்கள் உம்மை மீண்டும் அணைப்பர்.

இடபம்; துஷ்டர்களின்உறவு உங்களைச் சங்கடத்தில் மாட்டிவைக்கும் பின்னனியில் பிளவிற்கு இடமுண்டு வழக்கு விவகாரத்தைத் தவிர்த்துக் கொள்ளவும் உணர்ச்சிவசப்படாது இருக்கவும்.

மிதுனம்: கற்றதனுல்பயன் இன்று கைமேல் கிடைக்கும், தகுதியில் முன்னேற்றமுண்டு, தரமான வாழ்வு கிட்டும், எதிரிகள் பணிவர். எதிலும் வெற்றியுண்டு, நுட்பமான வேலைகளில் ஈடுபடவும்.

கடகம்: நம்பிக்கை மோசடி நடக்கும், வியாபாரத்துறையில் நஷ்டம்ஏற்படலாம். முதலீட்டைத் தவிர்க்கவும், வாத ரோகம் தென்படக்கூடும், உணவு விஷயத்தில் சுகாதாரம் வேண்டும்.

சிங்கம்: எழுத்தாளர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கு பெரும்நன்மைகள்குவியும் நீண்டநாள்கனவுஇன்றுநனவாகும். பெரியவர்களின்உதவி தாராளமாகக் கிடைக்கும். தையல் கலையில் ஆர்வம் பிறக்கும்.

கன்னி: கவர்ச்சிகரமான தினம். காதலர்கள் இன்பத்தில் மிதப்பர். கரும்புபோல் வாழ்க்கை இனிக்கும். களஸ்திர வழியால் சுகம் கிடைக்கும். செல்வாக்கு மேலும் சிறப்படைய இடமுண்டு.

துலாம்; விபத்திற்கு இடமுண்டு. நிதானத்துடன் நடந்து கொள்ளவும். பலவழிகளிலும் பணம் செலவாகும். கடன்படவும் நேரிடலாம். எதிரிகளின் அட்டகாசம் அதிகரிக்கும்.

விருச்சிகம்: பிதா வழியில் மகிழ்ச்சிகரமான செய்திக்கும் இடமுண்டு. தெய்வநம்பிக்கையில் ஆர்வம் கிடைக்கும். உறவினர் ஒருவர் உம்முடன் ஒத்துழைக்கமுன்வார்.

தனு: நடுநிலை தவருது நல்லதைச் செய்வீர்கள், உங்கள் புத்திக்கூர்மையை மற்றவர்கள் பாராட்டுவார்கள், பழைய நண்பரின் சந்திப்பு நன்மையைக் கொடுக்கும். கடற்றெழிலாளர் அதிக லாபமடைவர்.

மகரம்: ஒளிபரப்பும் வாழ்க்கை, உறவினர் மத்தியில் ஒற்றுமை மலரும், எதிர்பார்த்ததைவிட அதிகம் கிடைக்கலாம், தடைப்பட்ட காரியம் இன்று நல்ல முடிவைத் தேடித் தரும்.

கும்பம்: கூர்மையான ஆயுதங்களுடன் பழகாது இருக்கவும் போக்குவரத்துவிடயங்களில் கவனம் வேண்டும் திடீர்த்திருப்பம் திகைக்கவைக்கும் பிரயாணத்தின்போது பொருள்நழுவும்.

மீனம்: ஆத்திரப் படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடும் அயலவர்களுடன் பகை ஏற்படலாம் வயது முதிர்ந்த பெண்ணுல் அவப்பெருக்கு இடம் உண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
**க. வேலுப்பிள்ளை**

# இன்று உடுபிடவைகள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல பாதிக்கப்பட்ட அகதிகளுக்கும் செஞ்சிலுவை சங்கத்தினர், இன்று மாலை 3 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் வைத்து, உடுபிடவைகள் வழங்குவார்கள். உணவு விநியோகத்திற்கு வழங்கப்பட்ட அட்டையுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (கு)

### அவசரகாலச்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நீடிக்கப்படுவதையும், பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் முறியடிக்கப்படுவதையும் ஆதரிப்பதாகக் கூறுகிறார்கள். ஆனுல் அவர்கள் பயங்கரவாதத்தை முறியடிக்கவும், பிரிவினையைத் தடைசெய்யவும் ஜனுதிபதி கூட்டிய வட்டமேசை மகாநாட்டில் கலந்துகொள்ளாததன் காரணம் தெளிவாகத் தெரியவில்லை.

இலங்கையில் பெரும்பான்மை, சிறுபான்மை சமூகத்தவரிடையே ஒற்றுமை நிலவவேண்டுமென்பதை இந்தியாவும் ஆதரிக்கிறது. பிரதமர் இந்திராவும் தமது சமீபத்திய கருத்துக்களில் இதனைத் தெளிவாகத் தெரிவித்துள்ளார்'' என்றார்.

### இரு பஸ் ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன. இந்த ஜிப்பிலிருந்த சுமார் ஆறு இளைஞர்கள் இராணுவத்தினரைக் கண்டதும் ஆயுதங்களை விட்டுவிட்டு காட்டுக்குள் ஓடிவிட்டனர்.

இத்தகவல்களை தகுதிவாய்ந்த அதிகாரி திரு. டக்ளஸ் லியனகே நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். (மா-கு)

### கூட்டணி எம்.பி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ள திரு. அமிர்தலிங்கத்தை சந்தித்து தற்போதைய நிலை பற்றி ஆலோசனை செய்வதற்காக வடக்கு கிழக்கிலுள்ளகூட்டணி எம். பி.க்கள் கொழும்பு வருவார்கள்என்றுஎதிர்பார்க்கபடுகிறது. இச்சந்திப்புப்பற்றி கூட்டணி எம். பி. க்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. (கு)

## மரண அறிவித்தல்

### உலகநாதர் செல்லத்துரை

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினதும், சிங்கப்பூர் மாலாவி பல்கலைக்கழகத்தினதும் இளைப்பாறிய விரிவுரையாளர் உலகநாதர் செல்லத்துரை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இராஜதுரை, திருமதி யோகம்மா வேலுப்பிள்ளை ஆகியோரின் சகோதரர் ஆவார். அன்னுரின் பூதவுடல் இன்று 27-8-83 சனிக்கிழமை காலை 10 மணிக்கு கெருடாவில் மயானத்திற்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். 8392

## மரண அறிவித்தல்

### கா. சடையர்

கொக்குவில் மேற்கு முதலிகோவிலடி தேவாலய வீதியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் திரு. கா. சடையர் அவர்கள் 25-08-83 வியாழக்கிழமையன்று காலமானுர். இவர் யாழ்ப்பாணம் பெரியகடை ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ ஸ்தாபகரும் பிரபல கைத்தறிப்புடவை உற்பத்தியாளரும் காலம்சென்ற தையல்நாயகியின் அன்புக்கணவரும், கங்கைநாதன் (ஆசிரியர்), லோகநாயகி, கமலநாயகி, ரங்கநாயகி, லிங்கநாதன், சிவலோகநாதன் (பங்காளர்கள், ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ) ஆகியோரின் அன்புத் தந்தையும், அ. ஜெயரத்தினம் (உதவித்தேர்தல் ஆணையாளர், யாழ்ப்பாணம்), வை. விஜசித்தம்பி (ஆசிரியர் சென் சேவியர் வித்தியாலயம், நுவரேலியா), ஏ. தேவஅருள்ராஜா (கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்), அகிலாண்டநாயகி ஆகியோரின் மாமனுரும், துஷ்யந்தி, தமயந்தி, கல்யாணி, ராகவன், ஸ்ரீராம், காயத்திரி, துளசிதா, விமலகாந்த் ஆகியோரின் பாட்டனுருமாவார். அன்னுரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக 27-08-83 சனிக்கிழமை பகல் 12 மணிக்கு தாவடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றூர், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

(8384) ஜி. எஸ், லிங்கநாதன்.